



# உழைப்பும், ஆதிக்க சாதியின் வஞ்சனையால் இழப்பும் கொண்ட உழைப்பாளிகளான

## ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சியை சூழ்ச்சியால் தடுக்க... சட்டத்தை மீறி,

## கள் இறக்கி விற்பனை செய்வதை தடைசெய்யக்கோரி

# ஆதித்தமிழர் பேரவை சார்பில்

# கண்டன ஆர்ப்பாட்டம்

**நாள் : 10.6.2009 புதன்கிழமை காலை 10.00 மணி**
**இடம் : செஞ்சிலுவை சங்கம் - கோவை.**

தலைமை :

தோழர் **தி. செ. கோபால்**
மேற்கு மண்டல செயலாளர்

**கண்டன உரை :**

அய்யா
# இரா. அதியமான் அவர்கள்
நிறுவனத் தலைவர்

இருந்தது போதும் செருப்பாய் ! எழுந்திரு தோழா நெருப்பாய்!!

கள் குடித்தால்... சிறு நீரக கல் அடைப்பு, கல்லீரல் பாதிப்பு, மஞ்சள் காமாலை, இரத்தசோகை, முகம் வெளிர்தல், நரம்பு தளர்ச்சி, சிறு மூளை பாதிப்பு, கண் பாதிப்பு, இரைப்பை பாதிப்பு, குடல்நோய்கள் என அனைத்துவிதமான நோய்களும் மனிதனை தாக்கும். இதற்கும் ஒருபடி மேலாக சிறுவர்களும், ஒடுக்கப்பட்ட குடும்பப் பெண்களும் கள் அருந்தும் அவலம் நேரிடும். ஆக ஒட்டுமொத்த சமுதாயமும் கள் உடலுக்கு நல்லது என்ற பொய் செய்தியை நம்பி உடலுக்கு எந்தவிதத்தில் கள்ளால் கேடு விளையும் என்ற விழிப்புணர்வு இல்லாமல் கள் அருந்தி மிகப்பெரும் அழிவை நோக்கி சென்று விடுமோ? என்ற அச்சம் பல சமுதாயங்களைச் சேர்ந்த சமூக ஆர்வலர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே, நாட்டை சீரழிக்கின்ற கள் இறக்கி விற்கும் படுபாதக செயலை செய்யும் விவசாயிகளின் தென்னை பயிரிட்டிருக்கும் நிலத்திற்கு பயிர்க்கடன், உரக்கடன் உள்ளிட்ட விவசாயக்கடன்கள் கொடுப்பதை நிறுத்த வேண்டும். மேலும் இலவச மின்சாரத்தை ரத்து செய்வதுடன் தமிழக அரசின் தடையை மீறி கள் இறக்குவதை கிரிமினல் வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுத்து தமிழக மக்களை காப்பாற்ற வேண்டும் என்ற உன்னதநோக்கத்தோடு அனைத்து மக்களின் நலன் கருதி **கண்டன ஆர்ப்பாட்டங்களையும், மாநாடுகளையும் நடத்திட ஆதித்தமிழர் பேரவை தீர்மானித்திருக்கிறது.** எனவே, அனைத்துச் சமுதாய தோழர்களும் தங்கள் பங்களிப்பை நல்கிட அன்புடன் அழைக்கின்றோம்.

**அருந்ததிய மக்களின் ஒப்பாரி சத்தத்தில் எக்காளமிடும் ஆதிக்கசாதிகள் உடனடியாகத் திருந்தவேண்டும்.**

என்றும் சமுதாயப் பணியில்...

# ஆதித்தமிழர் பேரவை,

**கோவை மாவட்டம்.**

தொடர்புக்கு: 94430 63962, 97503 76650, 97505 21567,

நிலா ©: 0424 - 2258503, 94430 45155.

முன்னிலை : தோழர்கள்

| | |
|---|---|
| **வானுகன்**<br>தெற்கு மாவட்ட செயலாளர் | **தமிழ்மணி**<br>திருப்பூர் மாவட்ட செயலாளர் |
| **கவி அரசன்**<br>செம்மேடு | **களபிரர்**<br>கலை இலக்கிய அணி தலைவர் |

கண்டன உரை : தோழர்கள்

# சுப. இளங்கோவன்

பொதுச் செயலாளர்

# ப. பெருமாவளவன்

நிதி செயலாளர்

| | |
|---|---|
| **இராசராசன்**<br>துணைப் பொதுச்செயலாளர் | **மணிமாறன்**<br>துணைப் பொதுச்செயலாளர் |
| **தீபா**<br>துணைப் பொதுச்செயலாளர் | **பெரியார்தாசன்**<br>தெற்கு மாவட்ட தலைவர் |

சமுதாய நலன் கருதி... சிறுதீப்பொறி, பெரு நெருப்பாய் எங்கள் பிரகடனம்

*புரட்சியாளர் அம்பேத்கர் வழியில்...*

உழைக்கும் மக்களே!

உங்கள் உயர்வான உழைப்பால் கிடைக்கின்ற ஊதியத்தை உங்களின் அனுமதியின்றி பறித்துக் கொள்ள ஆதிக்கசாதி வர்க்கங்கள் திட்டமிட்டே மதுவை அருந்தும் பழக்கத்தை உங்கள் மீது திணித்தார்கள். ஒருவரை மிரட்டியோ, பசப்பு வார்த்தையாலோ, கடுமையான முயற்சியாலோ அடிமைப்படுத்திட முடியாது. ஆகவே, போதையை சிறு மூளைக்கேற்றி அறிவை மூளையிலிருந்து வெளியேற்றி அறிவில்லாமல் அப்பாவியாய் நிற்பவனின் உடைமைகளை பறித்துக் கொண்டு சர்வ சாதாரணமாய் அடிமைப்படுத்தி விட்டார்கள்.

அதற்கு முதல்படியாக கள் உங்கள் உடல்நலத்திற்கு மிகவும் நல்லது என்ற பொய் செய்தியைக் கூறி உங்களை நம்ப வைத்தார்கள். பின் சாராயத்தை கலந்து குடிக்கச் செய்தனர். அதன் விளைவாக ஒடுக்கப்பட்ட மக்களின் 2.5 இலட்சம் பஞ்சமி நிலங்களை மிக எளிதாகப் பறித்துக்கொண்டனர். இப்படியே விட்டால் உழைக்கும் வர்க்கத்தை உயிருள்ள ஒரு பிண்டமாகத்தான் காணமுடியும் என்பதை உணர்ந்து தமிழக அரசு கள் இறக்குவதை மிகக்கடுமையாக எதிர்த்து தடை உத்தரவை பிறப்பித்தது.

ஆனால், பூரண மதுவிலக்கை அமுல்படுத்த அரசு முன்வராத காரணத்தால் இன்று வரை உழைக்கும் வர்க்கம் மேன்மை பெற இயலாத நிலையில் உள்ளது. இம்மக்களின் வாழ்க்கை நிலை உயர வேண்டுமானால் பூரண மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டும் என்று ஆதித்தமிழர் பேரவை தீவிரமாக போராடி வருகின்றது. ஏழைத்தாய்மார்களின் பெருமுயற்சியால் அவர்களின் குழந்தைகள் நன்கு படித்து, நாங்கள் யாருக்கும் அடிமையில்லை என்று நெஞ்சுறுதியுடன் இருக்கும் இந்நேரத்தில் மீண்டும் கள் உடலுக்கு நல்லது என்ற பொய் மூட்டையை அவிழ்த்து விட்டு அதை பருக வைத்து ஒட்டுமொத்த சமுதாயத்தை அடிமையாக்கிவிட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிறது ஆதிக்கசாதி வர்க்கம்.

உண்மையில் கள் இறக்கினால்... மனிதருக்கு சூடு தனித்து பல வைட்டமின்களையும், மருத்துவ குணங்களையும் கொடுக்கும் இளநீர் கிடைக்காது. இதனால் 3 இலட்சம் இளநீர் வியாபாரிகள் நிலை என்னாவது? சமையலுக்கு சத்தான தேங்காய் எங்கே கிடைக்கும்? மட்டை உரிக்கும் தொழில், தேங்காய் பருப்பு எடுக்கும் தொழில், அதைக் காயவைத்து கொப்பரை தேங்காயாக விற்கும், வாங்கும் வணிகர்கள், பின் தேங்காய் எண்ணெய் ஆட்டும் ஆலைகள், எண்ணெய் வணிகர்கள், புண்ணாக்கு வியாபாரிகள், கால்நடை தீவன உற்பத்தியாளர்கள், நார்உரிக்கும் தொழிலாளர்கள், வணிகர்கள், கயிறு திரிக்கும் தொழிலாளர்கள் மற்றும் நாரால் உற்பத்தியாகும் ஷோபாசெட் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் கைவினைப்பொருட்கள், கார் கதவுக்கு பயன்படும் நார்கள் என அனைத்து தொழில்களும், அதன் தொழிலாளர்கள், வணிகர்கள் என ஒட்டு மொத்தமாக 30 இலட்சத்திற்கும் மேல் உள்ள தொழிலாளத் தோழர்களும், வணிக பெருமக்களும் இதை விடுத்து என்ன தொழில் செய்வார்கள்?